## முதன்மை மாவட்ட நீதிமன்றம் விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம்,

## அமர்வு வழக்கு எண்.125/2021

அரசு தரப்பு சாட்சி 1 (LW1 ) வாக்குமூலம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | - | ரவிதாஸ் | வட்டம் | - | |
| த/பெ | - | ஜெயராவ் | சாதி | - | |
| வயது | - | | மதம் | - | |
| கிராமம் | - | | தொழில் | - | |

இன்று 16.03.2026, 1969ம் ஆண்டு மத்திய சட்டம் 44ன் படி திருமதி. க.தீபா Bench Clerk Gr-1 அவர்களால் சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

(எதிரிகள் 3 முதல் 7 ஆஜர். எதிரி 1 V.C. மூலம் ஆஜர் செய்யப்பட்டார்)

### முதல் விசாரணை

நான் விழுப்புரம் மாவட்ட காவல் துறையில் பணிபுரிந்து 2017ல் பணிமூப்பு பெற்று ஓய்வில் இருந்து வருகிறேன். கடந்த 2016ம் வருடம் திண்டிவனம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வந்தேன். 07.06.2016ல் காலை உதவி ஆய்வாளர் குணபாலன் மற்றும் காவலர் அன்புமணி, சங்கர் ஆகியோர் சகிதம் ரோந்து பணியாக புறப்பட்டு திண்டிவனம் சஞ்சீவராயன் பேட்டை ஏரிக்கரையில் கருங்கல்லால் கட்டப்பட்ட சிதிலமடைந்த கிணற்றின் கரையின் அருகில் மறைவில் நாங்கள் பார்த்தபோது காவல் துறையால் பல வழக்குகளில் கைது செய்யப்பட்ட நன்கு பரிட்சையமான சஞ்சீவராயன் பேட்டையை சேர்ந்த செல்வராஜ் மகன் ஆனந்தன் (எ) மிலிட்டிரி ஆனந்தன் மற்றும் சுதாகர், இளையராஜா, மஸ்தான் மற்றும் நன்கு அடையாளம் தெரிந்த தீவனூரை சேர்ந்த 3 நபர்கள் ஆக 7 நபர்கள் எங்களை கண்டவுடன் கையில் வைத்திருந்த பொருட்களை கீழே போட்டுவிட்டு பதட்டத்துடன் சிதறி

ஓடினார்கள். நாங்கள் நால்வரும் ஆனந்தன் உட்பட மேலே குறிப்பிட்ட 4 நபர்களை பிடித்தோம். 3 நபர்கள் ஓடிவிட்டார்கள். அந்த இடத்தில் வெடிக்காத 3 வெடிகுண்டுகள் மற்றும் வெடிகுண்டுகளை தயாரிக்க பயன்படுத்தும் உபகரணங்கள் இருந்தன. ஆனந்தன் தாங்கள் அனைவரும் சட்ட விரோதமாக கும்பலை தாக்குவதற்காக வெடிமருந்து உடபகரணங்கள் வாங்கிவந்து வெடிமருந்து செய்ததாகவும் 3 வெடிகுண்டுகளை காண்பித்தும் மீதி உபகரணங்களை காட்டினார். உதவி ஆய்வாளர் உடனடியாக என்னையும் காவலர் அன்புமணியையும் எதிரிகளை பத்திரமாக காவல் காக்க சொல்லிவிட்டு அந்த இடத்திலிருந்து காவல் ஆய்வாளர் மற்றும் துணை கண்காணிப்பாளர் அவர்களுக்கும் கைப்பேசி மூலம் தகவல் கொடுத்தார். பிறகு உதவி ஆய்வாளர் வெடிமருந்து வழக்கு என்பதால் வட்ட நிர்வாக அலுவலரை சந்தித்து கிராம நிர்வாக அலுவலர் மற்றும் உதவியாளரை அழைத்து வருவதாக சொல்லிவிட்டு விழுப்புரம் மாவட்ட தடய அறிவியல் வெடிபொருள் ஆய்வாளர் திரு.சண்முகம் அவர்களுக்கு தகவல் அளித்தார். பிறகு கிராம நிர்வாக அலுவலர் மற்றும் உதவியாளர் மற்றும் விழுப்புரம் மாவட்ட தடய அறிவியல் வெடிபொருள் ஆய்வாளர் திரு.சண்முகம் ஆகியோருடன் சம்பவ இடத்திற்கு வந்து சம்பவ இடத்தை சாட்சிகள் முன்பாக பார்வையிட்டு பார்வை மகசர் தயார் செய்தார். அதை உடன் இருந்து நானும் காவலர் அன்புமணி மற்றும் சங்கர் ஆகியோர் பார்த்தோம். பிறகு எங்கள் முன்பாகவே திரு.சண்முகம் அவர்கள் அங்கிருந்து வெடிபொருட்கள் மற்றும் வெடிகுண்டுகளை ஆராய்ந்து அவை யாவும் வெடிபொருட்கள் சம்மந்தப்பட்டவை மற்றும் மனித உடலுக்கு தீங்கு விளைவிக்ககூடியவை என்று கூறியதன் பேரில் மேற்படி தடயங்களை சாட்சிகள் முன்பாக உதவி ஆய்வாளர் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினார். பிறகு எதிரி ஆனந்தன் எவ்வித தூண்டுதலும் துன்புறுத்தலும் இன்றி தாமாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை நிர்வாக சாட்சிகள் கிராம அதிகாரி மற்றும்

உதவியாளர் முன்பாக தயார் செய்து அவர்கள் கையொப்பம் எங்கள் முன்பாக வாங்கினார். பிறகு ஆனந்தன் வாக்குமூலத்தில் கூறிய 3 எதிரிகளையும் பதிவு செய்து எங்களிடம் கூறினார். எங்களுக்கும் அந்த 3 எதிரிகளையும் காட்டத்தெரியும். பிறகு பிடிபட்ட எதிரிகள் நால்வர் மற்றும் ஓடிவிட்ட எதிரிகள் மூவர் மீதும் திண்டிவனம் காவல் நிலையத்திற்கு 16.00 மணிக்கு வந்து எதிரிகள் அனைவர்கள் மீதும் திண்டிவனம் காவல் நிலைய குற்ற எண்.414/2016 பிரிவு 5 of Explosive substance Act of 1908 படி வழக்கு பதிவு செய்து திரேக பரிசோதனைக்கு பிறகு எதிரிகள் நால்வரையும் பாராவசம் ஒப்புவித்தேன். இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ள எதிரிகளில் முதலாவதாகவும், இரண்டாவதாகவும், ஐந்தாவதாகவும் நிற்பவர்கள் அன்று நாங்கள் பிடித்த எதிரிகள் ஆவார்கள். மற்ற இருவரும் அன்று ஓடிவிட்டார்கள். இன்று நீதிமன்றத்தில் V.C. மூலம் ஆஜர்படுத்தப்பட்ட எதிரி தான் ஆனந்தன் என்ற மிலிட்டிரி ஆனந்தன் ஆவார். என்னை உதவி ஆய்வாளர் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்.

இன்று என்னிடம் காட்டப்படும் பார்வை மகசர் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள 2 சாட்சிகளும் எங்கள் முன்னிலையில் சாட்சி கையொப்பம் செய்தார்கள். அவர்கள் பெயர் எனக்கு ஞாபகம் இல்லை. கைப்பற்றப்பட்ட பொருட்களை என்னால் அடையாளம் காட்ட முடியும். கைப்பற்றப்பட்ட 3 நாட்டு வெடிகுண்டுகள் பாதுகாப்பிற்காக தடய அறிவியல் துறைக்கு அனுப்பப்பட்டது. என்னிடம் காண்பிக்கப்பட்ட சாம்பல் நிறத்தில் உள்ள மாவுகள் வாடையுடன் கூடிய வெடிபொருள் சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மஞ்சள் நிற பவுடர் சா.பொ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வெள்ளை நிற பவுடர் சா.பொ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இரும்பு துகள்கள் சா.பொ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பால்ரஸ் குண்டுகள் சா.பொ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. செய்திதாள் பேப்பரில் உள்ள ஆணிகள் சா.பொ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பிளாஸ்டிக் கவர்கள் சா.பொ.7 ஆக குறியீடு

செய்யப்படுகிறது. சற்றிவைக்கப்பட்ட சணல் கயிறு சா.பொ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது. உடைந்த மற்றும் உடையாத வெள்ளைநிற கூழாங்கற்கள் சா.பொ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**1ம் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை** (மற்ற எதிரிகள் தரப்பில் இதே குறுக்குவிசரணையை ஏற்றுக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது):

பொதுவாக எதிரிகள் மீது வழக்கு பதிவு செய்வது, சாட்சிகள் வாக்குமூலம் பதிவு செய்வது மற்றும் புலன்விசாரணை செய்வது போன்ற விபரங்கள் எனக்கு நன்கு தெரியும் என்றால் 35 ஆண்டுகால பணி அனுபவம் உள்ளதால் நன்கு தெரியும். காவல் நிலையத்தில் பணிபுரியும் காவலர்கள் மற்றும் ஏனைய அதிகாரிகள் தினசரி பணி மற்றும் அவர்கள் பராமரிக்கவேண்டிய பதிவேடுகள் பற்றி எனக்கு நன்கு தெரியும் என்றால் சரிதான். ரோந்து பணிக்கு செல்லும்படி அன்று என்னை ஆய்வாளர் பணித்தாரா என்றால் இல்லை, உதவி ஆய்வாளர் அவருடைய அதிகாரத்தை பயன்படுத்தி என்னை ரோந்து பணிக்கு அழைத்து சென்றார். காவலர்கள் அன்றன்றைய பணியினை பாக்கெட் டைரியில் எழுதி ஆய்வாளரிடம் கையொப்பம் பெறுவது வழக்கம் என்றால் சரிதான். அன்று ரோந்து பணிக்கு சென்றதை நான் பாக்கெட் டைரியில் எழுதி ஆய்வாளரிடம் கையொப்பம் பெற்று நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளேனா என்றால் இது சம்மந்தமாக என்னை விசாரிக்கவில்லை என்பதால் நான் பாக்கெட் டைரியை ஒப்படைக்கவில்லை. இது சம்மந்தமாக அன்றைய தினம் காவல் நிலையத்தில் பொது நாட்குறிப்பில் ரோந்து பணி பதிவு செய்யப்பட்டுள்ளதா நான் கேட்டு தெரிந்துகொண்டேனா என்றால் அது என்னுடைய பணி அல்ல, பொது நாட்குறிப்பில் பதிவு செய்வது உதவி ஆய்வாளரின் பணி ஆகும்.

சம்பவம் நடந்ததாக கூறும் இடம் ரோட்டில் செல்லும் போதே பார்க்ககூடிய இடம் என்றால் சரியல்ல. எதிரிகள் மறைந்து உட்கார்ந்திருந்தார்கள் என்று நான் ஆய்வாளர் என்னை விசாரித்தபோது கூறினேனா என்றால் இல்லை. நாங்கள் 4

பேரும் எந்த வாகனத்தில் ரோந்து பணிக்கு சென்றோம் என்று வாக்குமூலத்தில் கூறியுள்ளேனா என்றால் இல்லை. சம்பவம் நடந்ததாக கூறும் இடம் குற்றசம்பவம் நடைபெறும் இடம் என்றால் அப்படி இல்லை. அது விவசாயம் செய்யக்கூடிய இடம் என்றால் இல்லை. அந்த இடத்தில் எதிரிகள் சேர்ந்து இருக்கிறார்கள் என்று எங்களுக்கு தகவல் வந்ததாக என்றால் தகவல் ஏதும் வரவில்லை. அந்த இடம் பொதுமக்கள் புழங்ககூடிய இடம் என்றால் சரியல்ல.

எங்களை பார்த்தவுடன் எதிரிகள் எவ்வளவு தூரம் ஓடியிருப்பார்கள் என்றால் கிணற்றிலிருந்து சுமார் 100 அடி தூரம் ஓடியிருப்பார்கள். நாங்கள் பிடித்ததாக கூறும் 4 எதிரிகளிடமிருந்து இந்த சான்றுபொருட்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி 4 எதிரிகள் காட்டிய இடத்திலிருந்து மேற்படி சான்றுபொருட்களை கைப்பற்றியதாக நான் கூறுகிறேன் என்றால் ஆமாம். மேற்படி சான்றுபொருட்கள் கைப்பற்றுதல் மகசரில் கூறப்பட்டுள்ள அளவில் இல்லை என்றால் சரியல்ல, அவை வெடிமருந்து பொருட்கள் என்பதால் ஆவியாகியிருக்க வாய்ப்புள்ளது. இரும்பு துகள்கள், பால்ரஸ் குண்டுகள், ஆணிகள் ஆகியவை பொதுவாக கடையில் கிடைக்ககூடியவை என்றால் சரிதான். வெடிபொருட்கள் அதற்கான உரிமம் பெற்ற நபர்களுக்கு விற்கப்படும் என்றால் சரிதான். எதிரிகள் சட்ட விரோதமாக கும்பலை தாக்குவதற்காக வெடிமருந்து உடபகரணங்கள் வாங்கிவந்து வெடிமருந்து செய்ததாக கூறினார்கள் என்று நான் ஆய்வாளரிடம் அளித்த வாக்குமூலத்தில் கூறியுள்ளேனா என்றால் கூறினேன் ஆனால் அதனை ஆய்வாளர் பதிவு செய்யவில்லை. கிராம நிர்வாக அலுவலரையும் அவருடைய உதவியாளரையும் யார் அழைத்து வந்தது என்றால் உதவி ஆய்வாளர் நேரடியாக சென்று அழைத்து வந்தார். தடய அறிவியல் ஆய்வக அதிகாரி திரு.சண்முகம் அவர்களுக்கு யார் தகவல் சொன்னது என்றால் உதவி ஆய்வாளர் தகவல் சொன்னார். சம்பவ இடத்திலிருந்து எங்கள் காவல் நிலையம் சுமார் 20 நிமிட

நடக்கும் துாரத்தில் உள்ளது என்றால் சரிதான். காவல் நிலையத்திலிருந்து நீதிமன்றம் அதே 20 நிமிட துரத்தில் உள்ளது என்றால் சரிதான். ஆய்வாளருக்கும் துணை காவல் கண்காணிப்பாளருக்கும் தகவல் சொன்னதாக நான் ஆய்வாளரிடம் அளித்த வாக்குமூலத்தில் கூறியுள்ளேனா என்றால் நான் கூறினேன், ஆய்வாளர் பதிவு செய்யவில்லை. நான் கூறிய அந்த விபரங்களை ஏன் பதிவு செய்யவில்லை என்று ஆய்வாளரிடம் கேட்டேனா என்றால் ஆய்வாளரிடம் அவ்வாறு கேட்கும் அதிகாரம் எனக்கு இல்லை.

நாட்டுவெடிகுண்டுகளை எடுத்துசென்றது யார் என்று கேட்டால் அது எனக்கு தெரியாது, அது உதவி ஆய்வாளரும் ஆய்வாளரும் சம்மந்தப்பட்ட பணி ஆகும். நான் சொன்னது போல எந்த சம்பவும் நடக்கவில்லை என்றும் நான் சொன்னது போல எந்த ரோந்து பணிக்கும் செல்லவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் சொல்வது போல கிராம நிர்வாக அலுவலரும் அவரது உதவியாளரும் தடய அறிவியல் ஆய்வக அதிகாரியும் சம்பவ இடத்திற்கு வரவில்லை என்றால் சரியல்ல. ஏற்கனவே எதிரிகள் மீது வழக்கு இருப்பதனால் அவர்கள் மீது ஏதாவது வழக்கு பதிவு செய்து அவர்களை சிறையில் அடைக்கவேண்டும் என்ற நோக்கத்தில் சான்றுபொருட்களை தயார் செய்து பொய் வழக்கு போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

ARUMUGAM MANIMOZHI

PW2/20072024/OP332024
Digitally signed by ARUMUGAM MANIMOZHI
Date: 2026.03.16 17:35:29 +0530

Principal Sessions Judge,
Villupuram.

## முதன்மை மாவட்ட நீதிமன்றம் விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம்,

## அமர்வு வழக்கு எண்.125/2021

அரசு தரப்பு சாட்சி 2 (LW 3) வாக்குமூலம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | - | அன்புமணி | வட்டம் | - | |
| த/பெ | - | கலியபெருமாள் | சாதி | - | |
| வயது | - | | மதம் | - | |
| கிராமம் | - | | தொழில் | - | |

இன்று 16.03.2026, 1969ம் ஆண்டு மத்திய சட்டம் 44ன் படி திருமதி. க.தீபா Bench Clerk Gr-1 அவர்களால் சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

(எதிரிகள் 3 முதல் 7 ஆஜர். எதிரி 1 V.C. மூலம் ஆஜர் செய்யப்பட்டார்)

### முதல் விசாரணை

நான் தற்போது பிரம்மதேசம் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். சம்பவத்தன்று திண்டிவனம் காவல் நிலையத்தில் இரண்டாம் நிலை காவலராக பணிபுரிந்த போது 07.06.2016 காலை 10.30 மணிக்கு நானும் என்னுடன் சிறப்பு உதவி ஆய்வாளர் ரவிதாஸ் மற்றும் உதவி ஆய்வாளர் குணபாலன் அவருடன் இரண்டாம் நிலை காவலர் சங்கர் ஆகியோர் பகல் ரோந்து அலுவலாக சஞ்சீவராயன் பேட்டை அருகில் உள்ள கிடங்கல் 1 ஏரியில் உள்ள கருங்கற்களால் கட்டப்பட்ட கிணற்றின் அருகில் ஆஜர் எதிரிகள் எங்களை கண்டதும் சிலர் ஓட முயற்சித்தனர். அவர்களை பிடித்து விசாரித்து போது அவர்கள் பெயர் 1.ஆனந்தன், 2.சுதாகர், 3.மஸ்தான், மற்றும் பிரவின், சுரேஷ் ஆகியோர்கள் தங்களது பெயரை கூறினார்கள் மற்றும் அவர்களை மேலும் விசாரித்தபோது அவர்கள் வெடிபொருட்களை தயாரிப்பதற்காக வெடிமருந்து மற்றும் 3 நாட்டுவெடிகுண்டுகள் வைத்திருந்ததை ஒப்புக்கொண்டனர். அதற்கு

பாதுகாப்பாக என்னையும் சிறப்பு உதவி ஆய்வாளர் ரவிதாஸ் அவர்களையும் பணி அமர்த்திவிட்டு உதவி ஆய்வாளர் சம்மந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலர் மற்றும் கிராம உதிவியாளர் அவர்களுக்கும் தகவல் கொடுத்துவிட்டு மற்றும் வெடிபொருட்கள் சம்மப்பட்ட குற்றம் என்பதால் விழுப்புரம் தடய அறிவியல் துறை துணை இயக்குனர் சண்முகம் அவர்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. மேலும் கிராம நிர்வாக அலுவலர் பாஸ்கர் மற்றும் கிராம உதவியாளர் மகிபாலன் ஆகியோர் முன்னிலையில் பகல் 12.15 முதல் 1.00 வரை பார்வை மகசர் தயார் செய்தார். பகல் 12.00 மணிக்கு எதிரி ஆனந்தன், சுதாகர், இசை (எ) இளையராஜா, மஸ்தான் ஆகியோர்களை உதவி ஆய்வாளர் கைது செய்தார். பகல் 1.15 மணிக்கு எதிரி ஆனந்தன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை உதவி ஆய்வாளர் பதிவு செய்தார். மேலும் பச்சை நிற பாலித்தின் கவரில் உள்ள சாம்பல் நிற வெடிபொருள் வாசணையுடைய பொருட்கள், வெள்ளைநிற பாலிதின் கவரில் வெடிபொருள் வாசணையுடன் மஞ்சள் நிற பொருட்கள், ஆரஞ்சு நிற கவரில் வெள்ளை நிற வெடிபொருள் வாசணையுடன் பொருட்கள் மற்றும் செய்திதாளில் 3 கருப்பு டேப்பால் சுற்றப்பட்ட வெடிகுண்டு 3, இரும்பு பால்ரஸ் குண்டுகள் மற்றும் இரும்பு துகள்கள் மற்றும் இரும்பு ஆணிகள் மற்றும் வெடிகுண்டு தாயாரிக்கப்பயன்படும் சணல் குண்டுகள் ஆகியவற்றை 2.15 மணி முதல் 3.00 மணிவரை கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றியும் பகல் 16.00 மணிக்கு எதிரிகளுடன் மற்றும் கைப்பற்றப்பட்ட பொருட்களுடன் காவல் நிலையம் வந்து எதிரிகளை திரேக பரிசோதனை செய்து பாராவசம் ஒப்படைக்கப்பட்டது. இன்று நீதிமன்றத்தில் ஆஜரில் உள்ள எதிரிகள் தான் அன்று சம்பவத்தில் ஈடுபட்ட எதிரிகள். ஒரு எதிரி சுதாகர் இறந்துவிட்டார். என்னை உதவி ஆய்வாளர் விசாரித்தார்.

**1ம் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை** (மற்ற எதிரிகள் தரப்பில் இதே குறுக்குவிசரணையை ஏற்றுக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது):

அன்று ரோந்துபணிக்கு எந்த வாகனத்தில் சென்றோம் என்றால் என்னுடைய இருசக்கர வாகனத்தில் நானும் திரு.ரவிதாஸ் அவர்களும் சென்றோம். உதவி ஆய்வாளர் அவருடைய இருசக்கர வாகனத்தில் அவரும் சங்கர் என்ற காவலரும் வந்தார்கள். இந்த விபரத்தை உதவி ஆய்வாளர் என்னை விசாரித்த போது நான் கூறினேனா என்றால் கூறவில்லை. சம்பவம் நடந்ததாக கூறும் இடம் அனைவரும் பார்க்ககூடிய இடம் என்றால் சரியல்ல, அது ஏரியின் உள்பகுதியில் உள்ள கிணற்றின் அருகில் உள்ள இடம் ஆகும். கிராம நிர்வாக அலுவலரும் அவருடைய உதவியாளரும் சம்பவ இடத்திற்கு எத்தனை மணிக்கு வந்தார்கள் என்றால் சம்பவம் 10.30க்கு நடந்தது அவர்கள் 11.00 மணிக்கு வந்தார்கள். அவர்கள் இருவரும் வந்தபிறகு உதவி ஆய்வாளர் எத்தனை மணிக்கு சம்பவ இடத்திற்கு வந்தார் என்றால் உதவி ஆய்வாளர் அங்கேயே தான் இருந்தார். தடய அறிவியல் ஆய்வக அதிகாரி எத்தனை மணிக்கு சம்பவ இடத்திற்கு வந்தார் என்றால் அது எனக்கு ஞாபகம் இல்லை. அவருக்கும் உதவி ஆய்வாளர் தான் போன் மூலம் தகவல் சொன்னாரா என்றால ஆமாம். சம்பவ இடத்தை சுற்றி அருகில் கே.டி.ஆர் நகர், சஞ்சீவராயன் பேட்டை, பெலாகுப்பம் கிராமத்திற்கு செல்லும் வழி ஆகியவை உள்ளது என்றால் ஏரியிலிருந்து அவை சுமார் 1 கிமீ துூரத்தில் உள்ளது. சான்றுபொருட்கள் எதிரிகளிடமிருந்து கைப்பற்றவில்லை என்றும் சம்பவ இடத்திலிருந்து கைப்பற்றப்பட்டது என்றும் சொன்னால் அவர்கள் உட்கார்ந்திருந்த இடத்திலிருந்து எடுக்கப்பட்டது. ஒப்புதல் வாக்குமூலம், பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் எழுதியவர் யார் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. உதவி ஆய்வாளர் என்னை விசாரித்து பதிவு செய்த வாக்குமூலத்தை நான் படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். அந்த வாக்குமூலத்தில் நான் இப்போது குறிப்பிட்ட கிராம நிர்வாக அலுவலர் மற்றும் அவரது உதவியாளர் பெயர் குறிப்பிடவில்லை என்றால் அவர்கள் பெயர் தவறுதலாக வாக்குமூலத்தில்

பதிவு செய்யப்பட்டுள்ளது. அவர்கள் பெயர் தவறாக உள்ளது என்று உதவி ஆய்வாளரிடம் நான் சுட்டிக்காண்பித்தேனா என்றால் இல்லை.

நான் சொன்னது போல எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றும் நான் சொன்னது போல எந்த ரோந்து பணிக்கும் செல்லவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் சொல்வது போல கிராம நிர்வாக அலுவலரும் அவரது உதவியாளரும் தடய அறிவியல் ஆய்வக அதிகாரியும் சம்பவ இடத்திற்கு வரவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் எந்த ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. ஏற்கனவே எதிரிகள் மீது வழக்கு இருப்பதனால் அவர்கள் மீது ஏதாவது வழக்கு பதிவு செய்து அவர்களை சிறையில் அடைக்கவேண்டும் என்ற நோக்கத்தில் சான்றுபொருட்களை தயார் செய்து பொய் வழக்கு போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

ARUMUGAM MANIMOZHI
PW2/20072024/OP332024
Digitally signed by ARUMUGAM MANIMOZHI
Date: 2026.03.16 17:35:56 +0530

Principal Sessions Judge,
Villupuram.